மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# மரபு பாக்களில் 'வாழ்வியல் இலக்கணம்'

## Ethics in Ancient Poems

எல்ல. கிருஷ்ணமூர்த்தி/ Ella Krishnamurthy[1]
[1]M.B.A, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இந்தியா
Corresponding Email: ekrishnamurthy@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் எவ்வளவுதான் அறிவியல் கண்டுபிடிப்புகளால் முன்னேறிச் சென்றாலும் தம்முடைய அறிவாற்றலால் இயற்கையை மாற்றவியலாது என்பது உண்மை. பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்வுலகம் பல மாற்றங்களை அடைந்து வந்தாலும் சில முக்கிய மரபினை அறிந்தோ அறியாமலோ அப்படியே கடைபிடித்து வருகிறது. உலகில் வாழும் தாவரம், விலங்கினம், மனிதன் அனைத்திற்குமான வறையரைகொண்டு வாழ்வதே சிறப்பாகும். பண்டைய கால இலக்கிய நூல்கள் படைக்க வழிகாட்டியாக இருந்த பல்வேறு இலக்கண நூல்கள் எவ்வாறு இருந்து வருகின்றன என்பதையும் உலகிலுள்ள உயிரினம் மற்றும் பல்லின மக்கள் தத்தம் கடமைகளை செறிவாக செய்ய வேண்டும் என்பதையும் ஒப்புமையோடு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தற்கால அதிநவீன மனிதன் கூடுமானவரை தொன்றுதொட்டு இருந்துவரும் மரபினை மாற்றியோ பிளந்தோ புதுவகை தாவரங்களையும் உயிரினங்களையும் உணவிற்காகவும் பிறவற்றிகாகவும் உருவாக்க முயற்சி எடுக்கும்போது பல்வேறு பக்க விளைவுகளையும் சந்திக்கிறான். அவற்றுள் உலக மக்கள் வாழ தேவையான அடிப்படை ஆற்றல்களை இயற்கை நமக்கு வழங்கியிருந்தாலும் அந்த ஆற்றலை மனிதன் பிற ஆற்றலாக மாற்றும்போது வரும் இன்னல்களை மறந்துவிட முடியாது. இலக்கியம் படைக்கும் முறையை எப்படி தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் விவரிக்கின்றனவோ, அவ்வாறே இலக்கிய நூல்களில் குறிப்பாக நீதிநூல்கள் மனிதன் கடைபிடிக்க வேண்டிய அனைத்து வாழ்நாள் இலக்கணங்களையும் கூறியுள்ளதால் அவற்றை பின்பற்றி வாழும் மனிதனே நிறைவான வாழ்க்கையை வாழ்கிறான் என்பது உண்மை. வாழ்ந்து மறைந்த பின்னும் பலரால் போற்றக்கூடிய பெருவாழ்வை பெற்றுள்ளான் என்பதை வரலாறுகள் விளக்குகின்றன. சிறுவயது முதல் வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க வேண்டியவற்றை குறளடி, சிந்தடி, அளவடி, கழிநெடிலடி என படிப்படியாக உருவெடுத்து அதிகபட்சமாக ஓரடிக்கு 192 சீர்களோடு மொத்தம் 4 அடிகளே கொண்ட வள்ளலார் இயற்றிய திருவடிப்புகழ்ச்சி போல் நிறைவாக வாழ மரபென்னும் இலக்கணம் இன்றியமையாததாகும்.

**கருச்சொற்கள்:** மரபுப் பா, வாழ்வியல், இலக்கணம்

**Abstract**

This article explains with analogy how the various grammar books that were a guide for the creation of ancient literary texts and how the world's creatures and diverse people should perform their respective duties intensively. As modern man attempts to modify or cross-breed as much as he can to create new types of plants and organisms for food and other purposes, he faces various side effects. Although nature has provided us with the basic energies necessary for the people of the world to live among them, we cannot forget the hardships that come when man converts that energy into other energy. As the grammar books like Tolkappiyam and Nannul describe the method of creating literature, similarly in the literary books, especially the books of scriptures, it is true that the person who lives by following them lives a fulfilling ethic life. Histories show that even after his death he had a long life that was admired by many. Otherwise, if we don't stop the wild flood by building banks and dams, the fresh water from hills and mountain and rain falls will mix into the sea and be wasted. Similarly, the literature created for entertainment and temporary diversion will be easily and quickly forgotten by the people. Traditional way of writing and living is essential for everyone to live a complete life like an unique poem which contains single stanza Tiruvadipupkazhchi composed by Vallalar with a maximum of 192 words (seers) per line with a total of 4 lines which are to be followed from childhood and throughout life as couplets, sonnets, etc., (in Tamil Kuraladi - 2 lines, Sinthadi – 3 lines, Alavadi – 4 lines, Ghazinediladi – 5 lines onwards).

**Keywords:** traditional poem, grammar, lifestyle

**முன்னுரை**

மனிதன் எவ்வளவுதான் அறிவியல் கண்டுபிடிப்புகளால் முன்னேறிச் சென்றாலும் தம்முடைய அறிவாற்றலால் இயற்கையை மாற்றவியலாது என்பது உண்மை. பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்வுலகம் பல மாற்றங்களை அடைந்து வந்தாலும் சில முக்கிய மரபினை அறிந்தோ அறியாமலோ அப்படியே கடைபிடித்து வருகிறது. உலகில் வாழும் தாவரம், விலங்கினம், மனிதன் அனைத்திற்குமான வறையரைகொண்டு வாழ்வதே சிறப்பாகும்.

பண்டைய கால இலக்கிய நூல்கள் யாவும் செய்யுள் வகையில் யாப்பிலக்கணத்தில் படைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு படைக்க வழிகாட்டியாகப் பல்வேறு இலக்கண நூல்கள் இருந்துள்ளன. அவற்றுள் தொல்காப்பியம் மற்றும் நன்னூல் குறிப்பிடத்தக்கவையாகும். அதேபோல் உலகிலுள்ள உயிரினம் மற்றும் பல்லின மக்கள் தத்தம் கடமைகளை எவ்வாறு செறிவாகச் செய்ய வேண்டும் என்பதை சங்கால நீதிநூல்கள் காட்டுகின்றன. செறிவான இலக்கியத்தை இலக்கண நூல்களைப் போல் மனிதயினம் தம்வாழ்நாளில் செழிப்புற்று வாழ கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் இலக்கணத்தை ஓர் ஒப்புமையோடு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மரபு**

மரபு என்பது உடலிலும், உணர்விலும், அறிவிலும், சமுதாயத்திலும், மொழியிலும் நிலைத்துள்ள ஒன்று. அது பூக்கும் செடிமுதல், காய்த்து பழுத்து தன்னகத்தே விதையைத் தாங்கி, அதன்வழி தோன்றும் இனத்தில் ஊறி செழித்தோங்கும். அத்தகைய மரபு சமீப காலமாகச் சற்று உணர்வற்ற நிலையில் மாறிவருவதைக் காணும்போது பெரும் ஆபத்தைக் கொடுக்கும் ஒன்றாகத் தான் நினைக்கத் தோன்றுகிறது.

உலகில் சிலவேளைகளில் இயற்கைக்குப் புறம்பாக நிகழ்த்திக் காட்டுவதுண்டு. அதிகப்படியான பயிற்சியின் மூலம் வாழ்வில் சிலவற்றை சிலகாலம் அதாவது சில மணித்துளிகள் நிகழ்த்துவது மாயையாகத் தோன்றலாம். ஆனால், பெரும்பாலானவை எவ்வாறு கடைபிடித்து வருகிறது என்பதே மரபாகும்.

**உலக உயிரின வகைகள்**

அக்கால மனிதன் முன்பே கூடுமானவரை தம்முடைய அறிவாற்றல் மூலம் பலவற்றைப் புரிந்துகொண்டும் தெரிந்துகொண்டும் ஆராய்ந்துகொண்டும் தான் வருகிறான். ஆனால், முதன்முறையாகத் தொல்காப்பியம் அறிவானது கீழ்கண்டவாறு காட்டுகிறது

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனோடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே
(தொல். பொருளதிகாரம் நூற்பா 571)

ஓரறிவு என்பது உடலால் அறிவது. அதாவது தொடு அறிவு. இரண்டறிவென்பது தொடு அறிவு மற்றும் நாவால் அறியப்படும் சுவை அறிவு. மூன்றறிவென்பது தொடு அறிவு, சுவை அறிவு மற்றும் மூக்கால் அறியப்படும் சுவாச அறிவு. நான்கறிவென்பது தொடு அறிவு, சுவை அறிவு, சுவாச அறிவு மற்றும் கண்ணால் அறியப்படும் பார்வை அறிவு. ஐந்தறிவென்பது தொடு அறிவு, சுவை அறிவு, சுவாச அறிவு, பார்வை அறிவு மற்றும் காதால் அறியப்படும் கேட்டல் அறிவு. மனதையும் சேர்த்து ஆறறிவென்கிறார். 3000 வருடங்களுக்கு முன் இந்த ஆராய்ச்சி என்பது சாதாரணமல்ல.

தொல்காப்பியம் இலக்கணம் என்ற அடையாளத்துக்கு மேல் அறிவியலையும் ஆராய்ந்திருக்கிறது.

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(தொல். பொருளதிகாரம் நூற்பா 577)

மேலும், மனிதன் ஆறறிவு கொண்டவன் என்று அறிவுறுத்தியதோடு மனிதனுக்கு ஒத்த வெறு சில விலங்குகளும் உள்ளன.

ஒருசார் விலங்கும் உளவென மொழிப
(தொல். பொருளதிகாரம் நூற்பா 578)

இதன்பொருள், மனிதர்களைப் போலவே ஆறறிவு கொண்ட விலங்குகள், பறவைகளும் சில உண்டு. யானை, குரங்கு, கிளி போன்றவைகளுக்கு ஆறறிவு என்று குறிப்பிடுகிறார்.

ஆனால், தற்கால அதிநவீன மனிதன் கூடுமானவரை தொன்றுதொட்டு இருந்துவரும் மரபினை மாற்றியோ பிளந்தோ புதுவகை தாவரங்களையும் உயிரினங்களையும் உணவிற்காகவும் பிறவற்றிகாகவும் உருவாக்க முயற்சி எடுக்கும்போது பல்வேறு பக்க விளைவுகளையும் சந்திக்கிறான். அவற்றுள் உலக மக்கள் வாழ தேவையான அடிப்படை ஆற்றல்களை இயற்கை நமக்கு வழங்கியிருந்தாலும் அந்த ஆற்றலை மனிதன் பிற ஆற்றலாக மாற்றும்போது வரும் இன்னல்களை மறந்துவிட முடியாது.

அவ்வாறே தமிழ்மொழியிலும் பல்வேறு புதுமைகளைச் செய்வதாகக் கூறிகொண்ட சிலர் பிறமொழி நடைகளையும் தமிழோடு இடையிடையே புகுத்தி வந்திருப்பதை காணமுடிகிறது. மணிப்பிரவாள நடை என்றதொரு முறையே இதற்கு சான்றாகும். அதுவே, இக்காலத்தில் பிறமொழிக் கலப்பை மிகவும் எளிதாக மரபுதனை மறந்து இலக்கியப் படைப்புகளாக வருகின்றன என்பது இன்று நாம் காணும் விளைவுகளின் தொடக்கம் தான்.

இன்றளவில் பல்வேறு படைப்புகளில் பிறமொழி சொல்லிற்கேற்ப தமிழ் எழுத்துகளை எழுதுவதும் அதிநவீன கணினி பயன்பாட்டில் ஆங்கில எழுத்துவழி தமிழ்ச்சொற்களைக் கையாள்வதும் சற்று புரையோடிவிட்ட பக்கவிளைவென்றால் மிகையல்ல.

**அளவொடு கற்றுணர**

இலக்கியம் படைக்கும் முறையை எப்படி தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் விவரிக்கின்றனவோ, அவ்வாறே இலக்கிய நூல்களில் குறிப்பாக நீதிநூல்கள் மனிதன் கடைபிடிக்க வேண்டிய அனைத்து வாழ்நாள் இலக்கணங்களையும் கூறியுள்ளதால் அவற்றை பின்பற்றி வாழும் மனிதனே நிறைவான வாழ்க்கையை வாழ்கிறான் என்பது உண்மை. வாழ்ந்து மறைந்த பின்னும் பலரால் போற்றக்கூடிய பெருவாழ்வை பெற்றுள்ளான் என்பதை வரலாறுகள் விளக்குகின்றன.

வாழ்வியல் நெறிமுறைகளைச் சிறுவயது முதலே கற்றுணரவும் அதன் கடைபிடிக்கும் வகையையும் மிகவும் எளிதாக அமைந்துள்ளதைப் பார்ப்போம். செய்யுளில் யாப்பிலக்கண கணக்குப்படி குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என வகைப்படுத்தலாம்.

குறளடி – இருசீர்களைக் கொண்டது; சிந்தடி முச்சீர்களைக் கொண்டது; அளவடி நான்கு சீர்களைக் கொண்டது, நெடிலடி – ஐந்து சீர்களைக் கொண்டது கழிநெடிலடி- ஐந்திற்கும் மேற்பட்ட சீர்களைக் கொண்டது.

ஆத்திச்சூடியில் வரும் 109 அடிகளும் குறளடி. எடுத்துக்காட்டாக,

அறம்செய விரும்பு
(ஆத்திச்சூடி 1)
ஓரஞ் சொல்லேல்
(ஆத்திச்சூடி 109)

அடுத்து, சிந்தடி என்பது மூன்று சீர்களைக் கொண்டு இயங்கும் அடி, அளவடியின் நான்கு சீரில் ஒன்று சிந்தி(குறைந்து), மூன்று சீரில் இயங்குவதால் இதன் பெயர் சிந்தடி எனப்பெற்றது. இதனை முச்சீர் அடி என்றும் கூறுவர்.

திருக்குறளில் வரும் இரண்டாம் அடிவயானது சிந்தடியாகும். எடுத்துக்காட்டாக,

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று
(திருக்குறள், அதிகாரம் 2 வான் சிறப்பு, குறள் 11)

மேலும், ஆசாரக் கோவை எனும் நூலில் உணவு உண்ணும் போது கடைபிடிக்க வேண்டியவற்றை குறிப்பிடும் சிந்தியல் வெண்பா பின்வருமாறு. இதில் ஈற்றடி சிந்தடியாகும்.

காலில்நீர் நீங்காமை உண்டிடுக; பள்ளியும்
ஈரம் புலராமை ஏறற்க என்பதே
பேரறி வாளர் துணிவு
(ஆசாரக் கோவை 19)

அளவடி என்பது நான்கு சீர்களைக் கொண்டு இயங்கும் அடி, கொன்றை வேந்தனில் வரும் அடிவயானது அளவடியாகும். எடுத்துக்காட்டாக,

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
(கொன்றை வேந்தன் 1)

ஓதாதார்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்
(கொன்றை வேந்தன் 91)

மேலும், மூதுரை நல்வழி நூல்கள் முறையே 30 மற்றும் 40 வெண்பாக்களால் அமைக்கப்பெற்றவை. ஒவ்வொரு பாடல்களும் முதல் மூன்று அடிகள் அளவடிகளாலும் ஈற்றடி சிந்தடியாலும் ஆனவை.

நெடிலடி - ஐந்து சீர்களைக் கொண்டது. எடுத்துக்காட்டாக,

தனம்தரும், கல்விதரும், ஒருநாளும் தளர்வு அறியா
மனம்தரும், தெய்வவடிவும் தரும்,நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும், நல்லனஎல்லாம் தரும்,அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள், அபிராமி கடைக்கண்களே.
(அபிராமி அந்தாதி 69)

கழிநெடிலடி – அறுசீர், எழுசீர், எண்சீர், பன்னிருசீர், பதினான்கு சீர் என பல சீர்களைக் கொண்டது. இதன் தொடர்ந்து, அதிகபட்சமாக 192 சீர்கள் கொண்ட பாக்களைப் புலவர்கள் ஞானிகள் இயற்றியுள்ளதைத் தமிழுலகம் நன்கறியும்.

சிறுஅளவில் உள்ள சீர்கள் கொண்ட பாக்களை இயற்றுவதால் சிறுவர்கள் மிகவும் எளிதாக அத்தகைய பாடல்களைப் பயிலவும் வாழ்நாளில் பயன்படுத்தவும் முடியும் என்பது திண்ணம். சீர்கள் எண்ணிக்கை கூடுவதை போல் வளர்ந்து வரும் இளம்வயதினர் முதல் பெரியவர்கள் வரை முறையாகப் பயன்று வந்தால் அவர்களுடைய திறனும் ஆற்றலும் கூடும்.

அதிகபட்சமாக ஓரடிக்கு 192 சீர்களோடு மொத்தம் 4 அடிகளே கொண்ட வள்ளலார் இயற்றிய திருவடிப்புகழ்ச்சி போல் நிறைவாக வாழ மரபென்னும் இலக்கணம் இன்றியமையாததாகும்

இலக்கியம் படைக்க எப்படி இலக்கண நூல்கள் வழிகாட்டுகின்றனவோ அவ்வாறே மனிதன் வாழ்நாளில் மேலும் பலவற்றை தம்முடைய ஆற்றலுக்கேற்ப வாழ்வியல் இலக்கணத்தோடு வாழ்தல் அவசியம்.

இந்த உலகம் ஐந்து வகை பூதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பது உன்மை. இது இயற்கை அறிவு, வான் பற்றிய அறிவு இருந்தால்தான் இந்தப் பாகுபாடுகளைப் பிரிக்க முடியும். தொல்காப்பியர் கீழ்காணும் நூற்பாவில் விளக்குகிறார்.

நிலம் தீ நீர் வளி விசும்பு ஐந்தும்
கலந்த மயக்கம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்
(தொல். பொருளதிகாரம் நூற்பா 635)

வளி – காற்று; விசும்பு – வானம்; உலகம் என்பது இந்த ஐந்தும் கலந்தது என்கிறது இந்த நூற்பா. இது விஞ்ஞானத்தின் உச்சம் என்று தோன்றுகிறது. உலகில் மற்ற

இடங்களில் மனித நாகரிகம் தழைக்கத் தொடங்கிய தருணத்தில் அறிவியலின் உச்சத்தில் வாழ்ந்தது தமிழினத்தை எண்ணி பெருமைபடுவது ஆகும்.

தொல்காப்பியர் தம்முடைய தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலில் உள்ள எழுத்ததிகாரத்தில் 'பிறப்பியல்' எனும் தலைப்பின்கீழ் ஒலிகளுக்கான பிறப்பு இலக்கணம் கூறுகிறார். இவர் கூறும் பிறப்பு இலக்கணத்தை இன்றைய மொழியியலார் பெரிதும் போற்றுகின்றனர். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில் ஒலிகளின் பிறப்பை ஆராய்ந்து பார்க்கும்போது தொல்காப்பியர் பல நூற்றாண்டுகளுக்கு முன் பிறப்பியலில் சொன்ன கருத்துகள் பெரும்பாலும் ஒத்துப் போகின்றன.

உந்தி முதலா முந்து வளி தோன்றி,
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ,
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புஉற்று அமைய நெறிப்பட நாடி,
எல்லா எழுத்தும் சொல்லுங் காலை
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியும் காட்சி யான
(தொல். எழுத்திகாரம் நூற்பா 83)

என்ற நூற்பாவில் ஒலிகளின் பொதுப்பிறப்பு இலக்கணம் கூறுகிறார் தொல்காப்பியர்.

இந்நூற்பாவிற்கு உரை கூறவந்த நச்சினார்க்கினியர் எனும் உரையாசிரியர், "தமிழெழுத்து எல்லாவற்றிற்கும் பிறப்பினது தோற்றரவைக் கூறுமிடத்து, கொப்பூழ் அடியாகத் தோன்றி முந்துகின்ற உதானன் என்னுங் காற்றுத் தலையின்கண்ணும் மிடற்றின்கண்ணும் நெஞ்சின்கண்ணும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் என்ற ஐந்துடனே, அக்காற்று நின்ற தலையும் மிடறும் நெஞ்சுங் கூட எட்டாகிய முறைமையையுடைய தன்மையோடு கூடிய உறுப்புகளோடு ஒன்றுற்று இங்ஙனம் அமைதலானே, அவ்வெழுத்துகளது தோற்றரவு வேறுவேறு புலப்பட வழங்குதலை உடைய" என்று கூறுகிறார்.

கொப்பூழ் அடியில் உதானன் என்ற காற்றுத் தோன்றி வருகின்றது என்பது இன்றைய அறிவியல் ஆராய்ச்சிக்கு மாறானது. நெஞ்சில் உள்ள சுவாசப்பையில் இருந்தே காற்றுப் புறப்படும். அக்காற்று மிடற்றின் ஊடாகச் சென்று வாய்க்கு அல்லது வாய்க்கும் மூக்குக்கும் வருகின்றது என இன்றைய மொழியியலார் கொள்வர். இக்காற்றுத் தலைக்கும் செல்கின்றது எனக் கூறும் தொல்காப்பியர், தலை என்று கூறியிருப்பது எதைப் பற்றி எனத் தெரியவில்லை. ஆனால், தலைக்கு இக்காற்றுச் செல்வதில்லை என்கின்றனர் இக்கால மொழியியலார்.

### எழுத்தின் ஒலி பிறப்பு

எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஒலியணுக்கள். உயிர் தங்கியுள்ள உடம்பின் உள்ளே எழுகின்ற காற்றானது, மார்பு, கழுத்து, தலை, மூக்கு

ஆகியவற்றைப் பொருந்தி, உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய இவ்வுறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன. எழுத்துகளின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

எழுத்துகள் தோன்றுகின்ற மார்பு, கழுத்து, தலை, மூக்கு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும் உதடு, நாக்கு, பல், மேல்வாய்(அண்ணம்) முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் வழங்குவர்.

உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் முதல் எழுத்துகள் எனப்படும். மெய்யெழுத்துகளை ஒலிக்கும்பொழுது வேறுபட்ட மூன்று ஒலிகளை நாம் கேட்கலாம். அவை வல்லின ஒலி, மெல்லின ஒலி, இடையின ஒலி ஆகியன. அவ்வொலிகள் வேறுபடுவதற்குக் காரணம், அவை பிறக்கும் இடங்கள் வேறுபடுவனவேயாகும்.

எழுத்துகளின் பிறப்பினை, நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் கூறியதைப் போலவே, மொழியியல் அறிஞர் ஒலிநூலுள் அடக்குவர். ஒலி எழுவதற்குக் காரணமான காற்று, நிலைபெறும் இடங்களைக் காற்றறைகள் எனவும், ஒலி எழுவதற்குத் துணைசெய்யும் உறுப்புகளை ஒலிப்பு முனைகள் எனவும் கூறுவர்.

**முதலெழுத்துகளின் பிறப்பிடம்**

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் இடையின எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன. (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ மற்றும் ய, ர, ல, வ, ழ, ள).

மெல்லின எழுத்துகள் ஆறும் (ங,ஞ,ண,ந,ம,ன) மூக்கினை இடமாகக் கொண்டு பிறக்கின்றன. வல்லின எழுத்துக்கள் ஆறும் (க,ச,ட,த,ப,ற) மார்பினை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**உயிரெழுத்துகளின் பிறப்பிடம்**

அ, ஆ - ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன. அவற்றுள்,

முயற்சியுள் அஆ அங்காப்புடைய
(நன்னூல் -76)

(அங்காப்பு - வாயைத் திறத்தல்)

இ, ஈ, எ, ஏ, ஐ -ஆகிய ஐந்து எழுத்துகளும் வாயைத் திறப்பதோடு மேல்வாய்ப் பல்லை, நா விளிம்பு தொடுவதால் பிறக்கின்றன.

இ, ஈ, எ, ஏ, ஐ அங்காப்போடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே
(நன்னூல் - 77)

உ, ஊ, ஒ, ஓ, ஔ -ஆகிய ஐந்து எழுத்துகளும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.

உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவிவே

(நன்னூல்-78)

**மூச்சுக் காற்றின் அளவு**

மூச்சு இழுத்தல் அடக்குதல் வெளிவிடுதல் என மூச்சுக்காற்றை முறைப்படுத்தி இழுக்க அடக்க செலவிட

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் அறுபத்து நாலதில் கும்பகம்
ஊறுதல் முப்பத்து ரெண்டதில் ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகம் ஆமே

(திருமந்திரம், பாடல் எண் 568)

இப்பாடலில் பூரகம் (மூச்சை இழுத்தல்), கும்பகம் (மூச்சை அடக்கல்), மற்றும் இரேசகம் (மூச்சை வெளிவிடுதல்) ஆகியன குறித்தும், ஒவ்வொரு படியின் கால அளவை குறித்தும், எந்த நாசியினூடாக என்பது குறித்தும் விளக்கியுள்ளார் திருமூலர் முனிவர்.

**பாக்கள் பாடும் ஓசை**

பழந்தமிழ்ப் புலவர்கள் ஓசை வேறுபாடு கொண்டே 'பா' வேறுபாடு கண்டனர். செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை எனச் செய்யுளோசை நான்கு வகைப்படும்.

செப்பலோசை - இருவர் உரையாடுவது போன்ற ஓசை.
அகவலோசை - ஒருவர் பேசுதல் (சொற்பொழிவாற்றுதல்) போன்ற ஓசை.
துள்ளலோசை - அலைகளைப் போல ஏற்ற இறக்கமாய் வருவது போன்ற ஓசை,
தூங்கலோசை - சீர்தோறும் துள்ளாது தூங்கி வரும் ஓசை, தாழ்ந்தே வரும்.
வெண்பா - செப்பலோசை உடையது.
ஆசிரியப்பா - அகவலோசை உடையது.
கலிப்பா - துள்ளலோசை உடையது.
வஞ்சிப்பா - தூங்கலோசை உடையது.

**கட்டொழுங்கு**

மனிதன் தன் சிந்தனையில் தோன்றும் கவியாற்றலை ஒழுங்குபடுத்தி பாக்கள் இயற்ற வேண்டும். இல்லையேல், காட்டாற்று வெள்ளத்தைக் கரைகள் கட்டி அணைகள் கட்டி தடுக்காமல் விட்டால் நன்னீரானது பயனற்று கடலில் கலந்து வீணாகுமோ அதேபோல், பொழுதுபோக்கிற்காகவும் தற்காலிக துள்ளலுக்காவும் படைக்கப்படும் இலக்கியங்கள் விரைந்து மக்களால் மறக்கப்பட்டுவிடும்.

பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான பெருவாயின் முள்ளியார் இயற்றிய ஆசாரக்கோவை என்னும் நூலில் வரும் பல பாக்கள் ஒரு மனிதன் தம் வாழ்நாளில் அன்றாட

பழக்க வழக்கங்களில் எவற்றையெல்லாம் எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் என்பதை விவரித்து கூறுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆசாரம் தவறாதவர் அடையும் நன்மைகளாகப் பின்வரும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப, என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.

(ஆசாரக்கோவை, பாடல் எண் 2)

பிறப்பு, நெடுவாழ்க்கை, செல்வம், வனப்பு, நிலக்கிழமை, மீக்கூற்றம், கல்வி, நோயின்மை இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும் ஒழுக்கம் பிழையாதவர்.

அதேபோல் அதிகாலை எழுந்ததும் செய்ய வேண்டியவை என பின்வரும் பாடலில் காட்டுகிறார்.

வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்,
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்,
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே,
முந்தையோர் கண்ட முறை.

(ஆசாரக்கோவை, பாடல் எண் 4)

பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப்படுகிற வைகறைப் பொழுதாகிய அதிகாலையில் எழவேண்டும்; எழுந்தவுடன் அன்று செய்யவேண்டிய நற்செயல்களையும், ஒப்பற்ற பொருளான இறைவனையும் மனதில் நினைத்து, தியானிக்க வேண்டும்; பிறகு, பெற்றோரை விழுந்து வணங்கி நாளைத் தொடங்கவேண்டும் என்பதே நம்முன்னோர்கள் (மேன்மை அடைவதற்கு தங்கள் அனுபவத்தில் கண்டு) சொல்லிய சிறந்த வாழ்க்கைமுறை ஆகும்.

செய்யக்கூடாதன சில என பின்வரும் பாடலில் காட்டுகிறார்.

நீருள் நிழற்புரிந்து நோக்கார் நிலமிராக்
கீரார் இராமரமும் சேரார் இடரெனினும்
நீர்தொடா தெண்ணெய் உரையார் உரைத்தபின்
நீர்தொடார் நோக்கார் புலை.

(ஆசாரக்கோவை, பாடல் எண் 13)

தண்ணீரிலே தம் நிழலைக் காணக்கூடாது; சும்மா அமர்ந்திருந்து நிலத்தைக் கீறக்கூடாது; இரவில் மரத்தின் அடியில் தங்கக்கூடாது; குளிக்காமல் தலைக்கு எண்ணெய் தேய்க்கக் கூடாது; எண்ணெய்க்குளியல் செய்வதற்காக எண்ணெய் தேய்த்த பின், குளிக்காமல் பிறரைப் பார்க்கக்கூடாது.

சிறுவயது முதல் வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க வேண்டியவற்றை குறளடி, சிந்தடி, அளவடி, கழிநெடிலடி என படிப்படியாக உருவெடுத்து அதிகபட்சமாக ஓரடிக்கு 192 சீர்களோடு மொத்தம் 4 அடிகளே கொண்ட வள்ளலார் இயற்றிய திருவடிப்புகழ்ச்சி போல் நிறைவாக வாழ மரபென்னும் இலக்கணம் இன்றியமையாததாகும்.

பரசிவம்சின்மயம் பூரணம்
பரமானு பவவிலாசம்
தரமிகும் சர்வசா திட்டான
சங்குலவு நற்பூம்பதம்
மரபுறு மதாதீத வெளிநடுவி
கருணை யுந்தந்துவழ்விக்குமொண்மைப்பதம்
இரவுறும் பகலடிய
பதமழிவி லின்புதவு கின்றபதமே
(திருவருட்பா முதல் திருமுறை, திருவடிப்புகழ்ச்சி)

மரணமிலாப் பெருவாழ்வு என்னும் உன்னத நிலையடைந்த பெருமை வெகுசிலரையே சாரும்.

## நிறைவுரை

ஒரு சிறந்த வீட்டினை கட்டி முடிக்க பலவகை பொருள்களைப் பயன்படுத்தி சிறப்புற அழகுற அமைக்கின்றோமோ அவ்வாறே இந்த மனித உடலிலும் பல்வேறு வகையான உறுப்புகளைச் சிறுசிறு செல்களாலான கூட்டமைப்புகள் சேர்ந்து மிகவும் நேர்த்தியாக இயக்குகின்றன.

எழுத்து, அசை சீர், தளை, அடி தளை, தொடை என அறுவகை செய்யுள்களால் கட்டப்படும் பாக்கள் காலத்தால் அழியாது நிற்கும் தன்மையுடையன என்பதற்கு நம்முடைய பண்டையத் தமிழிலக்கிய நூல்களே சான்றாகும். எனவே, மரபு தவறாது பாக்களை இயற்றி மாண்புடன் இயற்றுவோம் என உறுதியெடுப்போம். பின்வரும் தலைமுறையினரும் அவற்றை கடைபிடிக்க நம்மால் இயன்றதைச் செய்வோம்.

## துணைநூற்பட்டியல்

Kanakaraj, S. (2016). The Tamil Classic TOLKAPPIYAM: Its Antiquity and Universal Appeal. Indian Literature, 60(1 (291)), 184–191. http://www.jstor.org/stable/44478927
அருந்தவராஜா, க., மங்களரூபி, & சிவகுமார். (2016). திருக்குறள்-திருக்குர்ஆன் வகுத்துள்ள அறநீதிக்கோட்பாடுகள் சமூகவரலாற்று நோக்கில் ஒப்பியல் ஆய்வு.
அருள்நந்தி தம்பிரான். (1951). திருமந்திரம். திருமகள் பதிப்பகம்; தமிழ்நாடு.
இராமசுப்ரமணியம், ஏ. (2009). பதினெண் கீழ்க்கணக்குத் தொகுதி 1, செல்லப்பா பதிப்பகம், மதுரை.
சொக்கலிங்கம், சு. (2003). ஆசாரக்கோவை, வானதி பதிப்பகம், சென்னை.